# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.95/மா/2025
நாள் 24.09.2025

திரு. S.V. உதயகுமார் ..... முறையீட்டு மனுதாரர்
நாகர்கோவில்

ஆணையர் ..... எதிர் மனுதாரர்
நாகர்கோவில் மாநகராட்சி

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S ரோடு, கதவு எண் 439A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.உதயகுமார் என்பவரின் 08.01.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.01.2025 அன்று பெறப்பட்டு 95/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S ரோடு, கதவு எண் 439A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.உதயகுமார் என்பவர் 08.01.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நாகர்கோவில் மாநகராட்சி வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலைய கடைகள் ஏலம் விடப்பட்டதில் நிகழ்ந்த முறைகேடுகள் விவரம்:–

நாகர்கோவில் மாநகராட்சி வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தின் மேற்கு பகுதியில் புதியதாக 10 கடைகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றை வாடகைக்கு விடுவதற்கென 13.11.2024 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது. மேற்கண்ட 10 கடைகளில் இரண்டு கடைகளுக்கு ஒற்றை ஒப்பந்த புள்ளி (Single Tender) பெறப்பட்டுள்ளது. இக்கடைகளின் பரப்பளவு தோராயமாக தலா 115 சதுரடி ஆகும். சராசரி மாத வாடகையாக ரூ.30,000/–க்கு இரண்டு நபர்களிடமிருந்து பொது ஏலத்திற்கான ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டதினை தொடர்ந்து 29.11.2024 அன்று நடைபெற்ற மாமன்ற இயல்பு கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டது. வாடகை குறைவு மற்றும் முறைகேடுகள் குறித்து எனது எதிர்ப்பினை பதிவு செய்துள்ளேன். அதனை கருத்தில் கொள்ளாமல் மாமன்ற அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. மாமன்ற கூட்டப் பொருள், எதிர்ப்பு, தீர்மானம் ஆகியவற்றின் நகல் பார்வைக்கு இணைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட கடைகள் ஏலம் விடப்பட்ட நாளான 13.11.2024 அன்று பலரது போட்டி இருந்த நிலையில் குறிப்பிட்ட நபர்கள் குறைந்த வாடகையில் கடைகளை ஏலம் மூலம் பெறும் பொருட்டு பலரை தடுத்து நிறுத்தி குறிப்பிட்ட நபர்கள் (ஆளுங்கட்சியை

சார்ந்தவர்கள்) குறைந்த வாடகையில் கடைகளை பெற்று பலனடைந்து வருவதன் காரணமாக மாநகராட்சிக்கு பெருமளவில் நிதி இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

வடசேரி பேருந்து நிலையத்தின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள நான்கு கடைகள் 31.7.2024 அன்றைய பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் 13 நபர்கள் வரை ஏலம் கோரியதால் மாத வாடகையாக கடை ஒன்றிக்கு சுமார் ஒரு லட்சம் ஏலம் போய் உள்ளது. இக்கடைகளின் பரப்பளவு தலா 155 சதுர அடி ஆகும். இதன்படி ஒரு சதுர அடிக்கான வாடகை ரூ.645/– வசூலிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் 13.11.2024 அன்றைய ஏலத்தின் போது 115 சதுர அடி பரப்பளவு உடைய கடைகளுக்கான சராசரி மாத வாடகை ரூ 30,000/– மட்டுமே கிடைக்க பெறும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட நபர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒரு சதுர அடிக்கு ரூ.645/– பெற்று வரும் நிலையில், தற்போதைய 10 கடைகளுக்கு ஒரு சதுர அடிக்கு ரூ.260/– கிடைக்கப்பெறும் வகையில் தற்போது குறிப்பிட்ட நபர்களுக்கு முறைகேடாக பத்து கடைகளும் வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

மேலும் இவ்விடத்தில் இருந்த பழைய கடைகள் இரும்பு தகடுகள் கொண்டதாக இருந்த நிலையில் மாத வாடகை சுமார் ரூ.30,000/– வசூலிக்கப்பட்டு வந்ததாக மாமன்ற விவாதத்தின் போது தெரிவிக்கப்பட்டது. தற்போது புதியதாக கட்டப்பட்டுள்ள கான்கிரீட் கடைகளுக்கான மாத வாடகையாக ரூ30,000/– என்ற அளவில் டெண்டர் செட் அப் செய்து தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு வழங்கி முறைகேடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, 13.11.2024 அன்று நடைபெற்ற ஏலத்தின் மூலம் விடப்பட்ட கடைகள் போட்டி மூலம் உரிய வாடகையை பெற ஏதுவாக மீண்டும் பொது ஏலம் விட்டு மாநகராட்சிக்கு ஏற்பட்டு வரும் நிதி இழப்பினை தவிர்த்திட ஆவன செய்திட கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 07.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் தனது 30.06.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் 5622/2025/அ6–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

"1. மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் மேற்கு பகுதியில் நாகர்கோவில் மாநகராட்சியால் பத்து (10) புதிய கடைகள் கட்டப்பட்டன.

2. மேற்படி 10 கடைகளையும் ஒதுக்குவதற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாகர்கோவில் வழி தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 13.11.2024 அன்று மாநகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அவர்களால் நடத்தப்பட்டது. மொத்தம் 15 நபர்கள் கலந்து கொண்டார்கள்.

3. மேற்படி கடைகளுக்கான அடிப்படை மாத வாடகை நாகர்கோவில் மாநகராட்சியால் ரூ20,000/– என நிர்ணயிக்கப்பட்டது. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் முடிவடைந்ததும், மாநகராட்சி மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. 29.11.2024–ஆம் தேதியிட்ட மாமன்ற தீர்மான எண் 868–ன்படி மாமன்றம் ஒப்புதல் பெறப்பட்ட பின் கடைகள் அதிக மாத வாடகை கோரிய ஏலதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டன.

4. மேற்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மாநகராட்சி விதிகளின்படி வெளிப்படையாக பொது மக்களின் முன் நடத்தப்பட்டது. ஒவ்வொரு கடைகளின் ஏலத்

தொகை மற்றும் கலந்து கொண்டவர்கள் விவரங்கள் குறிப்பாக இணைக்கப்பட்டுள்ளன.

5. மேலும், புகார் மனுவில் வடசேரி பேருந்து நிலையத்தில் மேற்கு பகுதியில் அமைந்துள்ள நான்கு கடைகளுக்கு 31.07.2024 அன்று பொது ஏலத்தில் கடை ஒன்றிற்கு சுமார் ஒரு இலட்சம் வரை ஏலம் போய் உள்ளதாக ஒப்பிட்டு தெரிவித்துள்ளார் அதன் விபரம்.

- மேற்படி நான்கு கடைகள் மட்டுமே அன்றைய தினம் பொது ஏலம் நடைபெற்றது. அவை புதியதாக கட்டப்பட்ட பத்து கடைகளை விட பரப்பளவில் கூடுதலாக உள்ளது. அதனால் மாத வாடகை தொகையும் அதிகமாக உள்ளன.

- மேற்படி கடைகளின் மாத வாடகை கடை எண் 1–க்கு ரூ.99,999/–, கடை எண் 2–க்கு ரூ.77,777/–ம், கடை எண்.3–க்கு ரூ.91,111/–ம் மற்றும் கடை எண் 4–க்கு ரூ.1,25,000/– ஆகும். அதனை தொடர்ந்து கடை எண் 4, மாத வாடகை ரூ.1,25,000/– எடுத்த உரிமைதாரர் மேற்படி கடையினை மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைத்துவிட்டார். அதனை மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 27.05.2025 தேதியிட்ட மாமன்ற தீர்மான எண் 355–இன்படி மாத வாடகை ரூ.52,001/– உரிமம் வழங்கப்பட்டது.

6. மேலும் வடசேரி பேருந்து நிலையத்தில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு மாத வாடகை ரூ.6,500/– முதல் ரூ.30,000/– வரை இருக்கும். தோராயமாக 155 சதுரடி பரப்பளவு கொண்ட ஒரு கடைக்கு ரூ.1,00,000/– மேல் வாடகை என்பது நிலையான சந்தை விகிதங்களை விட கூடுதலாகும்.

7. வாடகை தொகையில் உள்ள வேறுபாடுகள் கடைகளின் பரப்பளவு, ஏல நேரம், கடைகளின் எண்ணிக்கை மற்றும் தற்போதைய சந்தை தேவை போன்ற காரணங்களாகும். அனைத்து நடவடிக்கைகளும் முறையாக பின்பற்றப்பட்டுள்ளன. மேலும் இதில் எந்த முறைகேடுகளும் ஏற்படவில்லை.

எனவே மாண்புமிகு உள்ளாட்சி முறைமன்ற நடுவம் மேற்படி புகார் மனுவினை ஆராய்ந்து இவ்வறிக்கையினை ஏற்று புகார் மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு பணிந்து சமர்ப்பித்துக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 12.08.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 12.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"நாகர்கோவில் மாநகராட்சி வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தின் மேற்கு பகுதியில் புதியதாக 10 கடைகள் கட்டப்பட்டு அக்கடைகளை வாடகை விடுவதற்கென 13.11.2024 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது. மேற்கண்ட 10 கடைகளில் இரண்டு கடைகளுக்கு ஒற்றை ஒப்பந்த புள்ளி (Single Tender) பெறப்பட்டுள்ளது. இக்கடைகளின் பரப்பளவு தோராயமாக தலா 115 சதுரடி ஆகும். சாராசரி மாத வாடகையாக ரூ.30,000/– இரண்டு நபர்களிடமிருந்து பொது ஏலத்திற்கான ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டதனை தொடர்ந்து 29.11.2024 அன்று நடைபெற்ற மாமன்ற இயல்பு கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டது. இது குறித்து வாடகை குறைவு மற்றும் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு எற்படுகிறது என்று குறிப்பிட்டு எனது எதிர்ப்பினை பதிவு செய்துள்ளேன்.

ஆனால், இதற்கு முன்பு 31.7.2024 நாளில் வடசேரி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள4 கடைகள் (ஒவ்வொரு கடையும் சுமார் 155 சதுரடி) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி மூலம் 13 நபர்கள் வரை ஏலம் கோரியதால் மாத வாடகை கடை ஒன்றிக்கு சுமார் ஒரு லட்சம் ஏலம் விடப்பட்டது. ஆனால் 13.11.2024 அன்றைய ஏலத்தின் போது 115 சதுரடி பரப்பளவு கொண்ட கடை சராசரி மாத வாடகை ரூ 30,000/– மட்டுமே கிடைக்க பெறும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட நபர்களுக்கு வாடகை விடப்பட்டுள்ளது. ஒரு சதுரடிக்கு ரூ.645/– பெற்று வரும் நிலையில், தற்போதைய 10 கடைகளுக்கு ஒரு சதுரடிக்கு ரூ.260/– கிடைக்கப்பெறும் வகையில் குறிப்பிட்ட நபர்களுக்கு முறைகேடாக வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

மேலும் இங்கிருந்த பழைய கடைகள் இரும்பு தகடுகள் பொருத்தப்பட்டு இருந்த நிலையில் மாத வாடகை சுமார் ரூ.30,000/– வசூலிக்கப்பட்டு வந்ததாக மாமன்ற விவாதத்தின் போது தெரிவிக்கப்பட்டது. தற்போது அதே கடைகளுக்கு புதியதாக கான்கிரீட் போடப்பட்டும், அக்கடைகளுக்குான மாத வாடகை ரூ30,000/– என்ற அளவில் டெண்டர் செட் அப் செய்து தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டு முறைகேடு நடந்துள்ளது.

எனவே, நாகர்கோவில் மாநகராட்சிக்கு ஏற்பட்ட நிதி இழப்பினை தவிர்த்திடும் வகையில், 13.11.2024 நடைபெற்ற ஏலத்தின் மூலம் விடப்பட்ட கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மீண்டும் போட்டி மூலம் உரிய வாடகையை பெற ஏதுவாக ஒப்பந்தபுள்ளி கோர பக்கத்து கடையின் வாடகையை அடிப்படை வாடகையாக நிர்ணயம் செய்து நாகர்கோவில் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்ட புகார்கள் குறித்து 39 பக்கங்கள் கொண்ட ஆவணம் – வால்யூம்–I இத்துடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கிறேன்.''

6. நாகர்கோவில் மாநகராட்சி உதவி ஆணையர் மற்றும் உதவியாளர் ஆகியோர் 12.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

''5வது மாமன்ற உறுப்பினரால் எழுப்பப்பட்ட கடை வாடகை ஏலம் விட்டது குறித்த புகார் மனுவிற்கு விவரங்கள் பின்வருமாறு:–

1. மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் மேற்கு பகுதியில் நாகர்கோவில் மாநகராட்சியால் 10 புதிய கடைகள் கட்டப்பட்டு அக் கடைகளை வாடகைக்கு விடுவதற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டன. 13.11.2024 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஏலத்தில் மொத்தம் 15 நபர்கள் கலந்து கொண்டார்கள்.

2. நாகர்கோவில் மாநகராட்சியால் அடிப்படை மாத வாடகை ரூ20,000/– என நிர்ணயிக்கப்பட்டது. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் முடிவடைந்து, மாநகராட்சி மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. 29.11.2024–ஆம் தேதியிட்ட மாமன்ற தீர்மான எண்868–ன்படி மாமன்றம் ஒப்புதல் பெறப்பட்ட பின் கடைகள் அதிக மாத வாடகை கோரிய ஏலதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டன.

3. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மாநகராட்சி விதிகளின்படி வெளிப்படையாக பொது மக்களின் முன் நடத்தப்பட்டது.

4. மனுதாரர் புகார் மனுவில் வடசேரி பேருந்து நிலையத்தில் மேற்கு பகுதியில் அமைந்துள்ள 4 கடைகள் 31.07.2024 அன்று பொது ஏலத்தில் கடை ஒன்றிற்கு சுமார் ஒரு இலட்சம் வரை ஏலம் போய் உள்ளதாக ஒப்பிட்டு தெரிவித்துள்ளார் அதன் விபரம் பின்வருமாறு:–

- 4 கடைகளுக்கு மட்டுமே பொது ஏலம் அன்றைய தினம் நடை பெற்றது. அவை புதியதாக கட்டப்பட்ட 10 கடைகளை விட பரப்பளவில் கூடுதலாக உள்ளன.
- கடைகளின் மாத வாடகை கடை எண் 1க்கு ரூ.99,999/–ம், கடை எண்.2க்கு ரூ.77,777/–ம், கடை எண்.3க்கு ரூ.91,111/–ம் மற்றும் கடை எண்.4க்கு மாத வாடகை ரூ.1,25,000/– ஆகும். கடை எண்.4க்கு மாத வாடகை ரூ.1,25,000/– எடுத்த உரிமதாரர் கடையினை மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைத்துவிட்டார். அதனை மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 27.05.2025 தேதியிட்ட மாமன்ற தீர்மான எண் 355–இன்படி மாத வாடகை ரூ.52,001/–க்கு உரிமம் வழங்கப்பட்டது.

5. வடசேரி பேருந்து நிலையத்தில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு மாத வாடகை ரூ.6,500/– முதல் ரூ.30,000/– வரை தோராயமாக 155 சதுரடி பரப்பளவு கொண்ட ஒரு கடைக்கு ரூ.1,00,000/– மேல் வாடகை என்பது நிலையான சந்தை விகிதங்களை விட கூடுதலாகும்.
6. வாடகை தொகையில் வேறுபாடுகள் கடைகளின் பரப்பளவு, ஏல நேரம், கடைகளின் எண்ணிக்கை மற்றும் தற்போதைய சந்தை தேவை போன்ற காரணங்களாகும்.
7. இதில் எந்தவித முறைகேடுகளும் நடைபெறவில்லை என இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.''

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த ஆவணம், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையர் மற்றும் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

நாகர்கோவில் மாநகராட்சி வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தின் மேற்கு பகுதியில் புதியதாக 10 கடைகள் கட்டப்பட்டு, அவற்றை வாடகைக்கு விடுவதற்கென 13.11.2024 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு, இவற்றில் இரண்டு கடைகளுக்கு சராசரி மாத வாடகையாக ரூ.30,000/– என இரண்டு நபர்களிடமிருந்து பொது ஏலத்திற்கான ஒற்றை ஒப்பந்த புள்ளி (Single Tender) பெறப்பட்டு, 29.11.2024 அன்று நடைபெற்ற மாமன்ற இயல்பு கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டது என்பதும், இது குறித்து வாடகை குறைவு மற்றும் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்றும் குறிப்பிட்டு நாகர்கோவில் மாநகராட்சி 5வது வார்டு மாமன்ற உறுப்பினரான மனுதாரர் தன்னுடைய எதிர்ப்பினை பதிவு செய்துள்ளது என்பதும், ஆனால், மேற்கண்ட இரண்டு கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி விடுவதற்கு முன்னர் 31.07.2024–ல் விடப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் வடசேரி பேருந்து நிலையத்தில் உள்ள ஒவ்வொரு கடையும் சுமார் 155 சதுரடி கொண்ட 4 கடைகளை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி மூலம் 13 நபர்கள் வரை ஏலம் கோரியதால் மாத வாடகை கடை ஒன்றிக்கு சுமார் ஒரு லட்சம் ஏலம் விடப்பட்டது என்பதும், ஒரு சதுரடிக்கு ரூ.645/– பெற்று வரும் நிலையில், தற்போதைய 10 கடைகளுக்கு ஒரு சதுரடிக்கு ரூ.260/– கிடைக்கப்பெறும் வகையில் குறிப்பிட்ட நபர்களுக்கு முறைகேடாக வாடகைக்கு விடப்பட்டுள்ளன என்பதும், இங்கிருந்த பழைய கடைகள் இரும்பு தகடுகள் பொருத்தப்பட்டு இருந்த நிலையில் மாத வாடகை சுமார் ரூ.30,000/– வசூலிக்கப்பட்டு வந்ததாகவும், தற்போது அதே கடைகளுக்கு புதியதாக கான்கிரீட்

போடப்பட்டும், அக்கடைகளுக்கான மாத வாடகை ரூ30,000/– என்ற அளவில் டெண்டர் செட் அப் செய்து தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டு முறைகேடு நடந்துள்ளது என்பதும், இதனால், நாகர்கோவில் மாநகராட்சிக்கு ஏற்பட்ட நிதி இழப்பினை தவிர்த்திடும் வகையில், 13.11.2024 அன்று நடைபெற்ற ஏலத்தின் மூலம் விடப்பட்ட கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மீண்டும் போட்டி மூலம் உரிய வாடகையை பெற ஏதுவாக ஒப்பந்தபுள்ளி கோருமாறும் பக்கத்து கடையின் வாடகையை அடிப்படை வாடகையாக நிர்ணயம் செய்யுமாறும் கோரியுள்ளது மனுதாரரின் மனு, மனுதாரர் சமர்ப்பித்துள்ள ஆவணம் மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தின் மேற்கு பகுதியில் கட்டப்பட்ட 10 கடைகளை ஒப்பந்தப்புள்ளி மூலம் வாடகைக்கு விடுவதற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு, 13.11.2024 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஏலத்தில் மொத்தம் 15 நபர்கள் கலந்து கொண்டார்கள் என்பதும், நாகர்கோவில் மாநகராட்சியால் அடிப்படை மாத வாடகை ரூ20,000/– என நிர்ணயிக்கப்பட்டது என்பதும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் முடிவடைந்து, மாநகராட்சி மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு, 29.11.2024–ஆம் தேதியிட்ட மாமன்ற தீர்மான எண்868–ல் ஒப்புதல் பெறப்பட்ட பின் கடைகள் அதிக மாத வாடகை கோரிய ஏலதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டன என்பதும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மாநகராட்சி விதிகளின்படி வெளிப்படையாக பொது மக்களின் முன் நடத்தப்பட்டது என்பதும், மனுதாரர் புகார் மனுவில் வடசேரி பேருந்து நிலையத்தில் மேற்கு பகுதியில் அமைந்துள்ள 4 கடைகள் 31.07.2024 அன்று பொது ஏலத்தில் கடை ஒன்றிற்கு சுமார் ஒரு இலட்சம் வரை ஏலம் போய் உள்ளதாக ஒப்பிட்டு தெரிவித்துள்ளது குறித்து, 4 கடைகளுக்கு மட்டுமே பொது ஏலம் அன்றைய தினம் நடை பெற்றது என்றும், அவை புதியதாக கட்டப்பட்ட 10 கடைகளை விட பரப்பளவில் கூடுதலாக உள்ளன என்பதும், கடைகளின் மாத வாடகை கடை எண் 1க்கு ரூ.99,999/–ம், கடை எண்.2க்கு ரூ.77,777/–ம், கடை எண்.3க்கு ரூ.91,111/–ம் மற்றும் கடை எண்.4க்கு மாத வாடகை ரூ.1,25,000/– ஆகும் என்பதும், கடை எண்.4க்கு மாத வாடகை ரூ.1,25,000/– எடுத்த உரிமதாரர் கடையினை மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைத்துவிட்டதால், அதனை மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 27.05.2025 தேதியிட்ட மாமன்ற தீர்மான எண் 355–ன்படி மாத வாடகை ரூ.52,001/–க்கு உரிமம் வழங்கப்பட்டது என்பதும், வடசேரி பேருந்து நிலையத்தில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு மாத வாடகை ரூ.6,500/– முதல் ரூ.30,000/– வரை தோராயமாக 155 சதுரடி பரப்பளவு கொண்ட ஒரு கடைக்கு ரூ.1,00,000/– மேல் வாடகை என்பது நிலையான சந்தை விகிதங்களை விட கூடுதலாகும் என்பதும், வாடகை தொகையில் வேறுபாடுகள் கடைகளின் பரப்பளவு, ஏல நேரம், கடைகளின் எண்ணிக்கை மற்றும் தற்போதைய சந்தை தேவை போன்ற காரணங்கள் என்பதும், இதில் எந்தவித முறைகேடுகளும் நடைபெறவில்லை என்பதும் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையர் மற்றும் உதவியாளரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தின் மேற்கு பகுதியில் கட்டப்பட்ட 10 கடைகளை ஒப்பந்தப்புள்ளி மூலம் வாடகைக்கு விடுவதற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஏல நடவடிக்கைகள் மாநகராட்சி விதிகளின்படி வெளிப்படையாகவும், பொதுமக்களின் முன்பும் நடத்தி முடிக்கப்பட்டு, நாகர்கோவில் மாநகராட்சியால் அடிப்படை மாத வாடகை ரூ20,000/– என நிர்ணயிக்கப்பட்டு, மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்868–ன்படி ஒப்புதல் பெறப்பட்ட பின், கடைகள் அதிக மாத வாடகை கோரிய

ஏலதாரர்களுக்கு மட்டும் தான் ஒதுக்கப்பட்டன என்றும், வாடகை தொகையில் வேறுபாடுகள் கடைகளின் பரப்பளவு, ஏல நேரம், கடைகளின் எண்ணிக்கை மற்றும் தற்போதைய சந்தை தேவை போன்ற காரணங்கள் என்பதும், இதில் எந்தவித முறைகேடுகளும் நடைபெறவில்லை என நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையர் வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தாலும், மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் The Tamil Nadu Transparency in Tenders Act, 1998-ன்படி முறையாக நடைபெற்றுள்ளதை உறுதி செய்யவும் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டதா என்பது குறித்தும், உள்ளாட்சி தணிக்கைத் துறை மூலம் சிறப்பு தணிக்கை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நாகர்கோவில் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. S.V.உதயகுமார்
கதவு எண் 439A,
M.S ரோடு,
பார்வதிபுரம்,
நாகர்கோவில்–629 003.

(2) ஆணையர்,
நாகர்கோவில் மாநகராட்சி,
நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

26/9/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032

26/9/25
9/10